கடவுள் துணை.

S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,

பாடிவரும்

கிளிக்கண்ணி.

குதம்பை சித்தர் பாடல்.





இட்டா-பார்த்தசாரதி நாயுடு & சன்ஸ்

இதன் விலை] 1933 [விலை 0-1-0.

பரமசிவம் துணை.

கிளிக்கண்ணி.

விநாயகர் துதி

தூண்டின்பவிட்டுவழி சொல்லுங்கருணைபொழி
தூண்டிவிநாயகனைத் தோத்தரித்தே—பாண்டிவள
நாட்டில்சிறந்த செந்தில் நாயகன்மேல் நூற்றிரெண்டு
தேட்டுங்கிளிக்கண்ணி செப்புவேன்.

நூல்

ஆனை அழைத்தவண்டி ஆறுமுகமானவண்டி
கோழிக் கொடியோனடி கிளியே
கொண்டுவரவேணுமடி

கைவளையல்விற்றவண்டி காட்டில்மரமானவண்டி
சுனையில்புகுந்தவண்டி கிளியே
சுந்திரமாய்நின்றவண்டி

ஐந்துகரனுக்கிளைய ஆறுமுகவேலவனைச்
செந்திற்குகந்தவனைக் கிளியே
சேரமனந்தேடுமடி

கூடிக்குலாவி மெத்த குகனோடு வாழ்ந்ததெல்லாம்
வேடிக்கையல்லவடி கிளியே
வெகுநாளைத்தொந்தமடி

நீலமயில்வாகனனால் நெஞ்சங்கரைந்ததண்ணி
பாலுங்கசப்பாச்சுதடி கிளியே
பசலையும் பற்றுதடி

மாலைவடிவேலவர்க்கு வரிசையாய் நானெழுதும்
ஓலையுங்கிருக்காச்சுதடி கிளியே
என் உள்ளமுங்கிருக்காச்சுதே

ஊரார்வகைசொல்லவும் உற்றார்வகைசொல்லவும்
வாராதுவார்த்தையெல்லாங் கிளியே
வந்துவந்துபோகுதடி

ஐந்துவயதினிலே அறியாப்பருவத்திலே
பிஞ்சிலேகூடினேனடி கிளியே
பிரியமனங்கூடுதில்லை

வள்ளிக்குகந்தவனை மருவியிருந்தவிதங்
கள்ளப்புணர்ச்சியல்லவடி கிளியே
கற்புநிலையப்படியடி

அந்தந்தநாளையில் நானறியாமற்கூடிவிட்டேன்
இந்தவிதிவருகுமென்று கிளியே
எண்ணியறிந்தேனில்லை

எல்லார்க்குமொருவிதம் எனக்குமொருவிதமடி
வல்லவர்க்கும்வல்லவனாங் கிளியே
மால்மருகன்றந்தமையல்

எட்டாப்பழமடியோ யிரங்காததேனடியோ
மட்டில்லாவானந்தமே கிளியே
மால் முருகன்றந்தசுகம்

சுட்டும்பொருளுமற்றுச் சும்மாயிருக்கவைத்தான்
எட்டிரண்டு மறியேனடி கிளியே
ஏமாந்திருந்தேனடி

வள்ளிகணவன்பேரை வழிபோக்க சொன்னாலும்
உள்ளங்குழையுதடி கிளியே
ஊனுமுருகுதடி

எட்டிஎட்டிப்பார்ப்பவர்க்கு எட்டயெட்ட நிற்குமது
கட்டுக்கடங்காதடி கிளியே
என் சுந்திரத்தின் பேருருவம்

கனல்மதுரமொழி கட்டழக னென்குறவன்
என்னபொடிபோட்டானடி கிளியே
இணைபிரியக்கூடுதில்லை

அறிவென்றானம்பால் அறிவது தன்னையென்றான்
பிரிதொன்றுமில்லை யென்றான் கிளியே
பேசாதிருந்தானடி

அலைந்துதிரிபவர்க்கு ஆசையுண்டு தாபமுண்டு
கலைந்து சுகிப்பவர்க்கு கிளியே
கண்ணீரும் வாராதடி

கானமயிலேறுமென்றன் கட்டழகன் றந்துவரும்
ஆனந்தமென்பதெல்லாங் கிளியே
அமுது தவிப்பதடி

உண்டார்க்கிருக்கவைக்கும் உன்மனைக்குள்ளேயிருந்து
கண்டார்க்கிருவகைக்கும் கிளியே
உன் கட்டழகன் பேருருவம்

தாழ்வாரை கைதூக்கித் தன்மனைக்குள்ளேயிருந்து
வாழ்வாரை வாழ்த்துமடி கிளியே
மால்மருகன்றன் கருணை

எட்டும்வரைக்கும்துன்பம் எட்டிவிட்டார்பேரின்பம்
தட்டினாலும்போகாதடி கிளியே
தானயறிந்தேனடி

மணந்தகுழலிருந்தோன் மற்றவழகிருந்தோன்
குணந்தான் குறியாயோ கிளியே
கோலமயில்வாகனர்க்கு

சொல்லாதசொல்லும் வருந்துறவும்வருந்தோட்டம்
கல்லாதகல்விவரும் கிளியே
என் கணவரைச்சேர்ந்தவர்க்கு

என்னோடுடன் பிறந்தார் எத்தனையோபேர்கள்பட்டார்
அத்தனைபேர்கள் பட்டுங் கிளியே
அவனாசைபோகுதில்லை

மாடுமனை போனாலென்ன மக்கள்சுற்றம் போனாலென்ன
கோடிசெம்பொன் போனாலென்ன கிளியே
குறுநகைபோதுமடி

முத்துநகைக்குமவன் போனவழிவார்த்தைகட்டும்
பித்து பிடித்தேனடி கிளியே
பேசுதற்கு கூசுதடி

ஆடுமயில்வாகனனல் அன்று முதற்பட்டதுயர்
எடுமடங்காதடி கிளியே
எல்லாமெழுதவென்றல்

என்னைகெடுத்தான்பின் என்னதானென்றுசொன்னய்
தன்னையுங்கெடுத் துக்கொண்டான் கிளியே
சண்முகத்தின்மாயவித்தை

பாதியுள்ளபேர்களுக்குப் பயன் தரும்பொருளது
முத்திபெற்றபேர்கட்கெல்லாம் கிளியே
மூடிவைக்கும் செம்பொன்னது

ஊனம்வருமென்றறியேன் உள்ளுக்குள்ளேகலந்தே
மானம்பறிபோச்சுதடி கிளியே
மற்றவர்க்கேச்சாச்சுதடி

அஞ்சியொடுக்கிநின்றேன் அழுது சலித்துநின்றேன்
பஞ்சுபாடுபட்டேன் கிளியே
என்பாக்கியத்தைக்காணவென்று

கொஞ்சியிருப்பார்கள் குதலைமொழிமாதரெல்லாம்
அஞ்சியிருப்பேனடி கிளியே
என்குறையைக் சொல்வேனடி

மதியாதொருவார்த்தை வாயிருந்துவந்துவிடும்
எதிரொன்று சொல்லாதடி கிளியே
எந்தன் வண்டும் சொந்தமடி

சீவிசிணுக்கிடுவார் செந்தூரம்பொட்டிடுவார்
மேவியிருந்திடுவார் கிளியே
விற்பகமொன் றமில்லையடி

வைவேன்பிணங்கிடுவேன் மறுத்துவாவிடுவார்
பொய்மையொன்றுங்கூடாதபடி கிளியே
என் பொன்னின்வடி வேலவர்க்கு

பேசியிருக்கிறார்கள் பித்தமுதல் நோய்களுக்கு
ஆசைக்கொருமருந்தைக் கிளியே
அங்கெழுதி வைத்தாரில்லை
சரியாயெழுதிவந்தும் தக்கவடிவேலரென்னை
பிரியமாவெழுத்தெழுதக் கிளியே
பிரமன் மறந்தானடி
இரண்டென்றானப்பால இரண்டுமொன்றுமென்றான்
ஒன்றென்றுமில்லையென கிளியே
உணர்வு தெரியவில்லை
தாரணியோர்கள் மெச்சத்தனியாகசெய்து வந்தேன்
சீரலைவாய்வந்ததனால் கிளியே
என் சீரலையவாச்சுதடி

கிளிக்கண்ணி முற்றிற்று.

உ

குதம்பைசித்தர் பாடல்.

வெட்டவெளிதன்னை மெய்யென்றிருப்பார்க்கு
பட்டய மேதுக்கடி குதம்பாய்
பட்டய மேதுக்கடி
மெய்ப்பொருள் கண்டு விளங்குமெஞ்ஞானிக்குக்
கற்பங்க ளேதுக்கடி குதம்பாய்
கற்பங்க ளேதுக்கடி
காணமற் கண்டு கருத்தோடிருப்பார்க்கு
வீணாசை யேதுக்கடி குதம்பாய்
வீணாசை யேதுக்கடி
வஞ்சகமற்று வழிதனைக் கண்டோர்க்கு
சஞ்சல மேதுக்கடி குதம்பாய்
சஞ்சல மேதுக்கடி

ஆதாரமான வடிமுடி கண்டோர்க்கு
வாதாட்ட மேதுக்கடி குதம்பாய்
வாதாட்ட மேதுக்கடி

நித்திரை கெட்டு நினைவோடிருப்பார்க்கு
முத்திரை யேதுக்கடி குதம்பாய்
முத்திரை யேதுக்கடி

தந்திரமான தலந்தனினிற்போர்க்கு
மந்திர மேதுக்கடி குதம்பாய்
மந்திர மேதுக்கடி

சத்தியமான தவத்திலிருப்போர்க்கு
உத்திய மேதுக்கடி குதம்பாய்
உத்திய மேதுக்கடி

நாட்டத்தைப் பற்றி நடுவணைசேர்வோர்க்கு
வாட்டங்க ளேதுக்கடி குதம்பாய்
வாட்டங்க ளேதுக்கடி

முத்தமிழ்கற்று விளங்குமெஞ்ஞானிக்குச்
சத்தங்க ளேதுக்கடி குதம்பாய்
சத்தங்க ளேதுக்கடி

உச்சிக்கு மேற்சென் றுயர்வெளி கண்டோர்க்கு
இச்சிப்பிங் கேதுக்கடி குதம்பாய்
இச்சிப்பிங் கேதுக்கடி

வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு
மோகாந்த மேதுக்கடி குதம்பாய்
மோகாந்த மேதுக்கடி

சாகாமற்றுண்டி தனிவழி போவோர்க்கு
ஏகாந்த மேதுக்கடி குதம்பாய்
ஏகாந்த மேதுக்கடி

அந்தரந்தன்னி லசைந்தாடு முத்தமர்க்கு
தந்திர மேதுக்கடி குதம்பாய்
தந்திர மேதுக்கடி

ஆனந்தம் பொங்கி யறிவோடிருப்பார்க்கு
ஞானந்தா னேதுக்கடி குதம்பாய்
ஞானந்தா னேதுக்கடி

சித்திர கூட்டத்தை தினந்தினங் காண்போர்க்குப்
பத்திர மேதுக்கடி குதம்பாய்
பத்திர மேதுக்கடி

முக்கோணந்தன்னில் முளைத்தமெஞ்ஞானிக்குச்
சட்கோணமேதுக்கடி குதம்பாய்
சட்கோணமேதுக்கடி

அட்டதிக்கெல்லா மசைந்தாடுநாதர்க்கு
நட்டணை யேதுக்கடி குதம்பாய்
நட்டணை யேதுக்கடி

முத்திபெற்றுள்ள முயங்குமெஞ்ஞானிக்குப்
பத்திய மேதுக்கடி குதம்பாய்
பத்திய மேதுக்கடி

அல்லலைநீக்கி யறிவோடிருப்பார்க்குப்
பல்லாக் கேதுக்கடி குதம்பாய்
பல்லாக் கேதுக்கடி

அட்டாங்கயோக மறிந்தமெஞ்ஞானிக்கு
முட்டாங்க மேதுக்கடி குதம்பாய்
முட்டாங்க மேதுக்கடி

வேகமடக்கி விளங்குமெஞ்ஞானிக்கு
யோகாந்தா னேதுக்கடி குதம்பாய்
யோகாந்தா னேதுக்கடி

மாத்தானை வென்று மலைமேலிருப்போர்க்கு
பூத்தான மேதுக்கடி குதம்பாய்
பூத்தான மேதுக்கடி

செத்தாரைப்போலத் திரியுமெஞ்ஞானிக்கு
கைத்தாள மேதுக்கடி குதம்பாய்
கைத்தாள மேதுக்கடி

கண்டாரைநோக்கிக்
கொண்டாட்ட மேதுக்கடி
கொண்டாட்ட மேதுக்கடி
கருத்தோடிருப்போர்க்குக்
குதம்பாய்

காலனைவென்ற
கோலங்களேதுக்கடி
கோலங்களேதுக்கடி
கருத்தறிவாளர்க்குக்
குதம்பாய்

வெண்காயமுண்டு
உண்காயமேதுக்கடி
உண்காயமேதுக்கடி
மிளகுண்டுசுக்குண்டு
குதம்பாய்

மாங்காய்ப்பாலுண்டு
தேங்காய்ப்பாலேதுக்கடி
தேங்காய்ப்பாலேதுக்கடி
மலைமேலிருப்போர்க்குத்
குதம்பாய்

பட்டணஞ்சுற்றிப்
முட்டாக்கு யேதுக்கடி
முட்டாக்கு யேதுக்கடி
பகலிற்றிரிவார்க்கு
குதம்பாய்

தாவாரமில்லை
தேவார மேதுக்கடி
தேவார மேதுக்கடி
தனக்கொருவீடில்லை
குதம்பாய்

பின்னையறிந்து
பின்னுசை யேதுக்கடி
பின்னுசை யேதுக்கடி
தலைவனை சேர்ந்தோர்க்கு
குதம்பாய்

பத்தாவுந்தானும்
உத்தார மேதுக்கடி
உத்தார மேதுக்கடி
பதியோடிருப்பார்க்கு
குதம்பாய்

---

*குதம்பை-ஆபரணம், குதம்பாய் ஆபரணத்தையுடையவள்.

குதம்பைசித்தர் பாடல்

முற்றிற்று.

சென்னை—சக்கரவர்த்தி அச்சுக்கூடம்.

அயத்தங்க திராவகம்.

இதுவே தேகபோஷக காருண்ணிய சஞ்சீவி

இருப்பவன் இரும்பைத் தின்பான் போகிறவன் பொன்னைத் தின்பான் என்னும் உலக வாக்கியத்தின்படி இரும்பின் சத்தை யுட்கொள்பவர்களுக்கு நரை, திரை முதலிய சரீரத் தளர்ச்சி சீக்கிரத்தில் உண்டாகாது. தாது விருத்தியை அதிகப்படுத்தி சரீரத்தை திடப்படுத்தக்கூடிய மருந்துகளில் இதைவிட சிரந்தது வேறொன்றும் யில்லை. அயத்தினுடையவும் தங்கத்தினுடையவும் சத்தைத் திராவகமாக இறக்கியிருக்கும் இந்தப் பரமசிரேஷ்டமான ஔஷதத்தை உட்கொள்வர் தேகம் வஜ்ஜிர சரீரமாகுமென்பது உண்மை. ஒரு முறை உபயோகப்படுத்திய யாவருக்கும் அன் மகிமை விளங்கும்.

20-நாள் மருந்து புட்டி	1	2	0
40-நாள் மருந்து புட்டி	2	0	0

பாக்கெட் மலையாள மாந்திரீகம்.

ஸ்ரீலஸ்ரீ சைவம் கிருஷ்ணசாமி பிள்ளை புத்திரர், ஸ்ரீசத்தி ஷண்முக வீக்ஷண்ய கடாக்ஷ வேலாயுத சுவாமி அவர்களால் சம்ஸ்கிருதத்தில் இருந்ததை பலர் வேண்டுகோளின்படி உலகில் யாவருக்கும் பயன்படுமாறு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இதில் உலகவசியம், தெய்வ வசியம், பெண்வசியம், தொழில் வசியம், மோகினி வசியம், திலோத்தமை வசியம், அஞ்சன மை வசியம், காட்டேரி வசியம், வராகி வசியம், சத்துருவசியம், மாடவ வசியம், இன்னும் அனேக வஸியங்களும், அதற்குத் தகுந்தவாறு தத்ரூப சக்கரங்களும் மூலமந்திர பூசை விதியுடன் அடங்கி இருக்கின்றது. சொற்ப காபிகளே தயாரில் இருக்கிறது. உடனே எழுதி கீழக்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்

இதன் விலை ரூபா 1-0-0

வி நா ய க பு ரா ண வ ச ன ம்.

படங்களுடன் விலை ரூபா 4 0 0

ஸ்ரீ ஜெயகுமாரி அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.